குன்றத்தூர் நகராட்சி ஆணையர் (பொ) அவர்களின் செயலாணைகள்
பிறப்பிப்பவர் : திருமதி.மு.ராணி, எம்.ஏ.,

நி.மு.எண்.755/2024/எப்1 **நாள்.02.08.2024**

பொருள்: மனைப்பிரிவு அங்கீகாரம் – காஞ்சிபுரம் மாவட்டம் – குன்றத்தூர் நகராட்சி – திருநாகேஸ்வரம் கிராமம் – நில அளவை எண்கள்.1/1A, 1B, 1C, 2A, 2B & 2/2B1-ல் அடங்கிய 6252 ச.மீ. பரப்பளவில் அமையவுள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்குதல் – சார்ந்து.

பார்வை :

1) உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும கடிதம் எண்.Layout-1/0342/2023 நாள்.20.02.2024

2) நகராட்சி ஆணையர், குன்றத்தூர் அவர்கள் முகவரிக்கு தானப்பத்திரம் பதிவு எண்.7256/2024 நாள்.03.05.2024 (1625 ச.மீ) & தானப்பத்திரம் பதிவு எண்.15922/2013 நாள்.21.11.2013 (66.35 ச.மீ)

3) உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் அவர்களின் திட்ட அனுமதி கடிதம் எண். (வரைபடத்துடன்) Layout-1/0342/2023 நாள்.14.05.2024

4) குன்றத்தூர் நகராட்சி மன்ற தீர்மானம் எண்.607 நாள்.21.06.2024

5) மனைப்பிரிவு கட்டணம் ரூ.3,27,450/- செலுத்துச்சீட்டு எண்.179/001/1/24-25/0005097 நாள்.31.07.2024

****

ஆணை:-

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட திருநாகேஸ்வரம் கிராமம், நில அளவை எண்கள்.1/1A, 1B, 1C, 2A, 2B & 2/2B1-ல் அடங்கிய 6252 ச.மீ. பரப்பளவில் புதிய குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திருமதி.சஹர் பானு என்பவரால் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டு, பார்வை 1ல் காணும் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும கடிதத்தின்படி சாலை அமைப்பு (Road Pattern) வரைபடம் அங்கீகரிக்கப்பட்டது. அதன்படி சாலைக்காக ஒதுக்கப்பட்ட 1691 சதுர மீட்டர், நகராட்சி பொதுபயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட 30 சதுர மீட்டர் மற்றும் TANGEDCO பொதுபயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட 27 சதுர மீட்டர் ஆகியவற்றினை பார்வை 2ல் காணும் தானப்பத்திரத்தின் மூலம் இந்நகராட்சிக்கு தானம் பெறப்பட்டுள்ளது.

பார்வை 3ல் காணும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அவர்களது கடிதத்தின் மூலம் மேற்படி நில அளவை எண்ணில் **43** குடியிருப்பு மனைகள் ஒதுக்கீடு செய்து **PPD/LO.No.103/2024** என எண்ணிடப்பட்டு நாள்.14.05.2024-ல் மனைப்பிரிவுக்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து பார்வை 4ல் காணும் குன்றத்தூர் நகரமன்ற தீர்மானத்தின்படி இறுதி ஒப்புதல் வழங்க அனுமதி அளிக்கப்பட்டது. எனவே பார்வை 5ல் குறிப்பிட்டுள்ளபடி மனைப்பிரிவு அங்கீகார கட்டணமாக ரூ.3,27,450/-ஐ செலுத்துச்சீட்டு மூலம் வசூலிக்கப்பட்டுள்ளது.

எனவே குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட திருநாகேஸ்வரம் கிராமம், நில அளவை எண்கள்.1/1A, 1B, 1C, 2A, 2B & 2/2B1-ல் அடங்கிய 6252 ச.மீ. பரப்பளவில் **43** குடியிருப்பு மனைகள் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும வரைபடத்தின்படி அமைக்க, மேற்படி நிலத்தின் உரிமையாளர் **திருமதி.சஹர் பானு** என்ற பெயரில் மனைப்பிரிவு அனுமதி எண்.**4/2024-2025** என எண்ணிட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் மனைப்பிரிவு அங்கீகாரம் அளித்து உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும திட்ட அனுமதி எண்.15820 நாள்.14.05.2024ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தவறாது கடைபிடித்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் மனைப்பிரிவு அங்கீகாரம் ரத்து செய்யப்படும்.

2. இந்நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட இடம் மற்றும் கட்டுமானம் தடை செய்யப்பட்ட பகுதி (No Development Zone) ஆகிய இடங்களில் எக்காரணத்தை கொண்டும் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது.

3. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள விவரப்படி மனைகள் பிரித்து மாற்றம் செய்யாமல் விற்பனை செய்தல் வேண்டும் மற்றும் மனைப்பிரிவு வரைபடத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

4. இந்த ஆணை தணிக்கைத்தடைக்கு உட்பட்டதாகும்.

5. மனைப்பிரிவு தொடர்பான இடத்தில் (புல எண்ணில்) உரிமை பிரச்சினை வருமேயானால் தாங்களே சிவில் / குற்றவியல் நீதிமன்றத்தில் தீர்வு பெற்றுக்கொள்ள வேண்டும். எந்த சூழ்நிலையிலும் நகராட்சி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் பொறுப்பேற்காது.

6. தவறான ஆவணம் சமர்ப்பித்து அனுமதி பெறப்பட்டது பின்னர் தெரியவந்தால் எந்த நேரத்திலும் வழங்கப்பட்ட உத்திரவு இரத்து செய்யப்படும்

ஆணையர் (பொ)
குன்றத்தூர் நகராட்சி

இணைப்பு:-
அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள்

பெறுநர் :-

1. திருமதி.சஹர்பானு,
   எண்.12/25, 5வது டிரஸ்ட் குறுக்கு தெரு,
   மந்தவெளிபாக்கம், R.A.புரம்,
   சென்னை – 600028.
2. வருவாய் ஆய்வாளர், குன்றத்தூர் நகராட்சி,
   (காலிமனை வரி தொடர்ந்து வசூலிக்க இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது)

நகல் :-

1. உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், எழும்பூர், சென்னை – 8
2. சார்பதிவாளர், குன்றத்தூர் சார்பதிவகம், குன்றத்தூர், சென்னை – 600069.
3. வட்டாட்சியர், வருவாய்த்துறை, குன்றத்தூர்
4. நகராட்சி பொறியாளர், குன்றத்தூர் நகராட்சி
   (சாலைப்பதிவேட்டில் பதிந்து உரிய நடவடிக்கைக்கு)